

சென்னையின் பிரதான சாலையில் பலர் பார்க்க தொடரும் அவலம்

# மலக்குழியில் புதையும் மனிதம்

**கையால் மலமள்ளும் தொழில் தடைச் சட்டத்தை ஏற்றுக்கொண்ட தமிழகத்தில் ஆண்டுதோறும் இருபதுக்கும் மேற்பட்டோர் மலக்குழிக்குள் மடிகின்றனர். ஆனால் இத்தொழிலை ஒழித்துவிட்டதாக சாதிக்கிறது தமிழக அரசு.**

ஜெயராணி

கடந்த செப்டம்பர் 3ந் தேதி நிலக்கரி ஊழல் விவகாரத்தில் நாடாளுமன்றம் முடக்கப்பட்ட நிலையில் மலம் அள்ளும் தொழிலாளர்களை பணியில் அமர்த்தத் தடை மற்றும் அவர்களின் மறு வாழ்வுக்கான சட்டம் 2012 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் இந்த அவசரச் சட்டத்திற்கான விதை சென்னையில் விதைக்கப்பட்டது. கையால் மலமள்ளும் அவலத்தைத் தடுக்க சமூக ஆர்வலர் ஆ.நாராயணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த பொது நல வழக்கில், "இன்னும் இரண்டு மாதங்களில் சட்டம் இயற்றவில்லை எனில் பிரதமர் அலுவலகச் செயலர் போன்ற உயர் அதிகாரிகள் நேரில் விளக்கமளிக்க உத்தரவிட வேண்டியிருக்கும்" எனக் கூறியதை எதிர்த்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. இந்த வழக்கில் கடந்த ஆகஸ்ட்



லென்ஸ்



"கழிவுகளை அகற்ற அறிவியல்ரீதியான தொழில்நுட்பம் இல்லை. கழிவுகளை அப்புறப்படுத்தும் விதம் குறித்து மக்களுக்குத் தெரியவில்லை."

**ஆ.நாராயணன்** *சமூக ஆர்வலர்*

## 50,000

தொழிலாளர்களுக்கு மேல் இத்தொழிலில் உள்ளனர். தமிழகத்தில் 203134 சுகாதாரமற்ற கழிப்பறைகள் உள்ளன. இவற்றை சுமார் 40,000 பேர் சுத்தம் செய்கின்றனர்.

## 80,000

இது சென்னை மாநகரில் இருக்கும் மலக்குழிகளின் எண்ணிக்கை. இவற்றிற்குள் மனிதர்களை இறங்கவைத்து வேடிக்கை பார்க்கிறது தமிழக அரசு.

## 20

பேருக்கு மேல் கடந்த 15 மாதங்களில் மலக்குழிக்குள் விஷவாயு தாக்கி இறந்திருக்கிறார்கள். இதற்காக யாரும் தண்டிக்கப்படவில்லை.

24ந் தேதி "நீங்கள் மக்களை முட்டாளாக்குகிறீர்கள். சுதந்திரம் கிடைத்து 65 ஆண்டுகளுக்குப் பின்னரும் கையால் மலமள்ளும் நிலை தொடர வேண்டுமென்பது துரதிர்ஷ்டவசமானது. மாநில கொள்கைக்கான வழிகாட்டு நெறிமுறை, கையால் மலமள்ளுவதை தடை செய்திருக்கும்போது அதற்கான ஒரு சட்டத்தை உருவாக்க நீங்கள் ஆர்வம் காட்டவில்லை" என மத்திய அரசை உச்ச நீதிமன்றம் வெளுத்து வாங்கியதில்தான் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த ஆர்ப்பாட்டம் எதுவும் பொது சமூகத்தின் புலன்களை துளியளவும் தொட்டிருக்காது என்பதே உண்மை. இச்சட்டத்தை உருவாக்குவதோ உருவாக்காமல் போவதோ எவ்வித சலனத்தையும் யாரிடமும் உண்டாக்கப் போவதில்லை. ஏனெனில் தங்களது மலக்குழிகள் அடைத்துக்கொண்டு நாற்றமெடுக்காமல் இருக்க, பாதாள சாக்கடைகள் சீராக ஓட, கழிவுநீர் கால்வாய்கள் பொங்கி குமட்டலை உண்டாக்காமல் இருக்க, செத்த விலங்குகளை அப்புறப்படுத்த மனிதர்கள் தேவை என்ற நினைப்பும் நம்பிக்கையும் எல்லோரிடமும் இருக்கிறது. இந்த நினைப்பும் நம்பிக்கையும் சாதாரணமாக உருவானதில்லை. "ஆதிக்கச் சிந்தனையிலிருந்து வார்த்தெடுக்கப்பட்ட அடிமைக் கருத்தியலால் வளர்த்தெடுக்கப்பட்டது" என்கிறார் ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் இரா.அதியமான். "சாதிப்படிநிலையில் கீழ் அடுக்கில் இருக்கும் தலித் மக்களில் அருந்ததியர் இன மக்களே அசுத்தமான வேலைகளைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தொழில் என இந்து மதம் உருவாக்கி வைத்திருக்கிறது. சாதியுடன் தொடர்புடைய இந்த வேலை சாதியை ஒழிக்கும் வரை ஒழிக்க முடியாது" என்கிறார் அவர்.

தமிழகத்தில் 80 லட்சம் மக்கள் தொகை கொண்ட அருந்ததியின மக்கள் துப்புரவுப் பணிகளில்தான் பெரும்பாலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது தவிர ஆதி திராவிடர், மலைக்குறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் அசுத்தமானப் பணிகளை செய்து வருகின்றனர். மதுரை எவிடென்ஸ் அமைப்பு 2010ஆம் ஆண்டு இழிதொழில்கள் குறித்து மேற்கொண்ட ஆய்வில் பிணவறை பணி, மலம் அள்ளுதல், கழிவுகளை அகற்றுதல் போன்ற அசுத்த வேலைகளை செய்பவர்கள் தலித் மக்கள் மட்டுமே என்பது கண்டறியப்பட்டது. "தலித்களே விரும்பித்தான் இந்த தொழிலை செய்கின்றனர் என்று சொல்பவர்கள் உண்டு. அருவருக்கத்தக்க தொழில்களை தலித் மக்கள் விரும்பி செய்கின்றனர் என்று சொல்வதே ஒரு வகையானத் திணிப்புதான். சாதியால் உண்டானக் கட்டாயமே ஒருவரை மலக்குழிக்குள் இறக்குகிறது" என்கிறார் எவிடென்ஸ் அமைப்பின் செயல் இயக்குநர் ஆ.கதிர்.

இழிதொழில்களை தலித் மக்கள் செய்ய வேண்டியது சமூகக் கடமையாக கருதப்பட்ட நிலையில் கடந்த 1993ஆம் ஆண்டு துப்புரவுத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தும் மற்றும் உலர் கழிப்பிடங்கள் கட்டுமானத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டத்தை எந்த மாநில அரசும் கண்டுகொள்ளவில்லை. பத்தாண்டுகள் கழித்தே சில மாநிலங்கள் இச்சட்டத்தை ஏற்றன. தங்கள் மாநிலங்களில் மலமள்ளும் தொழிலாளர்களே இல்லை என பல மாநிலங்கள் இச்சட்டத்தை புறக்கணித்துவிட்டன. கையால் மலமள்ளும் தொழிலாளர்களுக்கான தேசிய அமைப்பான சஃபாய் கரம்சாரி அந்தோலன் அமைப்பு 2003 ஆம் உச்ச நீதிமன்றத்தில் இச்சட்டத்தை அமல்படுத்தக் கோரி வழக்குத் தொடர்ந்த

## பாதுகாப்பு புறக்கணிப்பு

நோய் தாக்கும் அவலம்

திறந்தவெளிக் கழிப்பிடங்கள், பொதுக் கழிவறைகள், மலக்குழிகள், கழிவுநீர் கால்வாய்கள் தவிர மருத்துவமனைக் கழிவுகள், உயிரிழந்த மிருகங்களை அப்புறப்படுத்துதல், பிணவறையை சுத்தம் செய்தல் போன்ற அசுத்தமான பணிகளை செய்பவர்கள் எவ்வித பாதுகாப்பு கவசங்களுமின்றி வெற்று உடம்போடுதான் அப்பணியை செய்கின்றனர். தகர தட்டு மற்றும் வாளிகளை வைத்துக் கொண்டு கையாலே சுகாதாரப் பணியாளர்கள் வேலை செய்வதை கண்கள் உள்ள எல்லோருமே பார்த்திருக்கக்கூடும். ஆனால் பாதுகாப்பு பட்டை, முகக்கவசம், டார்ச், கையுறை, கண்ணாடி, தலைகவசம், அவசர ஆக்சிஜன் சாதனம், விஷவாயு சோதனைக் கருவி, தலையில் பொருத்தும் விளக்கு உள்ளிட்ட 20 பாதுகாப்பு கவசங்கள் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவற்றை வாங்க சில கோடிகளை செலவிட்டிருப்பதாக தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் மனுவில் கூறியுள்ளது. ஆனால் இவற்றை யார் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை. பாதுகாப்புக் கவசங்களின்றி கழிவுப் பணி செய்வதால் டிபி, மூச்சுத் திணறல், நுரையீரல் மற்றும் கல்லீரல் நோய்கள், தோல் நோய்களுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலான துப்புரவுப் பணியாளர்களின் ஆயுட்காலம் ஐம்பது வயதிற்கும் குறைவுதான். அப்படியே உயிர் வாழ்ந்தாலும் அவர்கள் கடுமையான நோய்களோடு வலி மிகுந்த வாழ்வையே எதிர்கொள்கின்றனர்.

செந்தில்



மலக்குழியை சுத்தம் செய்யும் சிறுவன்



பெசவாடா வில்சன்

விருந்தினர் பத்தி

கட்டுரையாளர் கையால் மலமள்ளும் இழிவை ஒழிக்க தேசிய அளவில் போராடுபவர்

# சாதி ஒழிப்பே இத்தொழிலை ஒழிக்கும்

உலகெங்குமுள்ள தொழிலாளர்கள் எங்களுக்கு வேலை வேண்டும், கூலி வேண்டும், கூலி உயர்வு வேண்டும், போனஸ் வேண்டும் என்று போர்க்குரல் எழுப்புகிறார்கள். ஆனால் இந்தியாவில் உள்ள கையால் மலமள்ளும் 'தொழிலாளர்கள்' மட்டும் எங்களுக்கு போனஸ் வேண்டாம், கூலி உயர்வு வேண்டாம், கூலி வேண்டாம், ஏன் இந்த தொழிலே வேண்டாம் என்று போராடுகிறார்களே, அவர்களைப் பற்றி இந்தியர்கள் எத்தனை பேருக்கு தெரியும்? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டில் பிறந்த ஒரு குறிப்பிட்ட சாதியினர்தான் கையால் மலமள்ளும் வேலையை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்படும் கேடு கெட்ட நிலையை இன்று வரை கேள்விகேட்க யாருமே இல்லாமல் போனது ஏன்? முற்போக்காளர்களும்கூட இந்தத் தொழிலை ஒழித்துவிட்டால் அவர்கள் வாழ்வாதாரத்திற்கு என்ன செய்வார்கள் என்றுதான் பரிதாபப்படுகிறார்களே தவிர இந்த அசுத்தத்தை முற்றிலுமாக துடைத்தெறியச் சொல்வதே இல்லை. டாக்டர் அம்பேத்கரின் சாதி ஒழிப்பு கருத்தியல்தான் இத்தொழிலை ஒழிக்கும் ஆற்றல் கொண்டது. இத்தனை காலமாக தூய்மைப் பணி செய்த சக மனிதனை இனி அந்த தொழிலை செய்ய அனுமதிக்கமாட்டேன்; அவன் வேறு தொழில் செய்வதற்கு ஆதரவளிப்பேன் என்ற சமூக அக்கறை என்றைக்கு வருகிறதோ அன்றுதான் இதை ஒரு ஜனநாயக சமூகமாக மதிக்க முடியும். கையால் மலமள்ளும் தொழிலை ஒழிக்க புது சட்டம் கொண்டு வந்துவிட்டதாக சொல்கிறார்கள். ஆனால் இதற்கு முன் இருந்த சட்டம் என்ன செய்தது? முந்தைய சட்டத்தின்படி இத்தொழிலைச் செய்ய கட்டாயப்படுத்துகிறவர்களுக்கு ஓராண்டு சிறை தண்டனையும் ரூ.2000 அபராதமும் விதிக்கப்படுவதாக சொல்லப்பட்டிருந்தது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 19 ஆண்டுகள் ஆகின்றன. இந்தியாவில் உள்ள 646 மாவட்ட ஆட்சியர்களும் இச்சட்டத்தை மீறுபவர்களை தண்டிக்க கடமைப்பட்டவர்கள். ஆனால் இந்தியா முழுவதும் ஒரே ஒரு நபர்கூட கைது செய்யப்படவில்லை. அவ்வளவு ஏன் குற்றப்பத்திரிகை கூட தாக்கல் செய்யப்படவில்லை. புதுச் சட்டம் என்ன செய்துவிடும்? செப்டம்பர் 3 அன்று நிறைவேற்றப்பட்டிருக்கும் இச்சட்டத்தில் கையுறை, காலுறை எல்லாம் அணிந்துகொண்டு இவ்வேலையை செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் உள்ள பாதாள சாக்கடையில் வேலை செய்து இறப்பவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். வன்கொடுமைகளில் பலியாகின்றவர்களை பற்றி கணக்கெடுக்கும் தேசிய குற்றப்பிரிவு ஆவணம் இதில் இறந்து போகிறவர்களை பற்றி பதிவு செய்வதில்லை. நாட்டின் இந்த அவலத்தை ஒழிக்க வேண்டும் என்றால் பிரதமர் தலைமையில் ஓர் அவசரக்குழு உருவாக்கப்பட்டு காலவரையறையுடன் கூடிய திட்டங்கள் அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டாக வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையாக இத்தனை நூற்றாண்டுகளாக இந்நாட்டில் கையால் மலமள்ளும் தொழிலை தலித் மக்கள் மீது திணித்த குற்றத்திற்காக குடிமைச் சமூகமும் பிரதமரும் நாடாளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும், கறுப்பர்களிடம் வெள்ளை அரசும் மக்களும் கேட்டது போல.

செந்தில்



மலக்குழிக்குள் இறங்கும் தொழிலாளி

சாய்

ஆவடி





**இம்மானுவேல் 27**

துப்புரவுப் பணி செய்யக்கூடாது என்று உறுதியாக இருந்தவர் மனைவியின் பிரசவ செலவுக்கு காசு கிடைக்குமே என்று சென்று உயிரை விட்டார்.

போது, தமிழகத்தில் கையால் மலமள்ளும் தொழிலாளர்களும் உலர் கழிப்பிடங்களும் இல்லை என மறுத்தது அப்போதைய அ.இ.அ.தி.மு.க அரசு. இப்படி அப்பட்டமாக மறுத்ததால் சட்டத்தை அமல்படுத்த வேண்டியதற்கான தேவை உருவாகாமல் போனது. "இப்படித்தான் ஒவ்வொரு முறையும் தமிழக அரசு பொய் சொல்கிறது. உலர் கழிப்பிடங்கள் இன்று இல்லாமல் போகலாம். ஆனால் திறந்த வெளி கழிவறைகள், பொதுக் கழிப்பிடங்கள், மருத்துவமனைக் கழிவுகள், செத்த விலங்குகள் என கவசங்கள் எதுவுமின்றி இத்தொழிலில் ஈடுபடுவோரை தினமும் பார்க்க முடியும். ஆனால் எப்போது கேட்டாலும் தமிழக அரசு கையால் மலமள்ளுவது இங்கே இல்லை என கண்ணை மூடிக் கொண்டு சொல்கிறது. ஒரு குற்றம் இருப்பதை ஒப்புக் கொண்டால்தானே அதை தடுக்க முடியும்" என்கிறார் நாராயணன்.

நாராயணனின் இந்த குற்றச்சாட்டு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் சுப்ரமணியன் வாயிலாக உறுதிபடுகிறது. "மனிதக் கழிவை மனிதன் அகற்றும் அவல நிலை தமிழகத்தில் இல்லவே இல்லை. இப்போதெல்லாம் யாரும் மலக்கூடைகளை தலையில் சுமப்பதில்லை. பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்பவர்களுக்கு பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்படுகின்றன. அதனால் அவர்கள் பாதுகாப்பாக பணி செய்கிறார்கள்" என்கிறார் அவர். 1993 சட்டம் கையால் மலமள்ளுதல் என்பதற்கு மனிதக் கழிவுகளை அகற்றுதல் என்று விளக்கமளிப்பதால் குப்பைக் கழிவுகள், சாக்கடைகளை, மலக்குழிக்குள் இறங்குதல் போன்றவற்றை சட்ட விரோதமாகக் கருத அரசுகள் மறுக்கின்றன.

"செத்த நாய், பூனைகளை அகற்றுவதும்



"ஆண்டுதோறும் உயிரிழப்புகள் நிகழ்ந்தாலும் 1993 சட்டப்படி தமிழகத்தில் இதுவரை ஒருவர்கூட தண்டிக்கப்படவில்லை."

**ஜி.இஸ்ரேல்,** *நிர்வாகி ஜனோதயம்*

சென்னை ஆவடியைச் சேர்ந்த இம்மானுவேல் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவி வினோலா (24). கடந்த மார்ச் 8, 2012ல் அ.இ.அ.தி.மு.க பிரமுகர் குப்பன் என்பவரின் வீட்டில் செப்டிங் டாங்க் அடைப்பை அகற்றச் சென்றவர் செப்டிங் விஷவாயுவால் கொல்லப்பட்டார். இவரோடு சென்ற சங்கரய்யாவும் உயிரிழந்தார். ஏற்கனவே இதே வீட்டில் இரண்டு துப்புரவு பணியாளர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என்றபோதும் குப்பன் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. பதினைந்து அடி ஆழ மலக்குழியை ஏழு அடியென பொய் சொல்லியிருக்கிறார் குப்பன். அரசு இரண்டு லட்சம் ரூபாய் இழப்பீடு அறிவித்திருக்கிறது. மூன்று சின்னஞ்சிறு குழந்தைகளோடு ஆதரவற்று நிற்கிறார் வினோலா.

ஆவடி



சாய்



சங்கரய்யா 50

மூன்று ஆண்டுகளாக மலக்குழிக்குள் இறங்கி பணியைச் செய்து வந்தவரின் உயிரை தொழிலே குடித்தது.

சென்னை ஆவடியைச் சேர்ந்தவர். 18 ஆண்டுகளாக மாநகராட்சி துப்புரவு பணியாளராக பணியாற்றுகிறார். மனைவி மற்றும் மூன்று பருவ வயது மகன்களோடு வாழ்ந்து வந்த சங்கரய்யா கூடுதல் வருமானத்திற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக மலக்குழி அடைப்புகளை அகற்றும் வேலைகளை செய்து வந்தார். மலக்குழிக்குள் வெற்று உடம்போடு இறங்குவார். அப்படித்தான் கடந்த மார்ச் 8ந் தேதி இம்மானுவேலோடு இப்பணியில் ஈடுபட்டிருந்தார். மலக்குழி மூடியைத் திறந்ததும் தாக்கிய விஷவாயுவில் இம்மானுவேல் மயங்கி உள்ளே விழ, அவரை காப்பாற்ற இறங்கிய சங்கரய்யாவும் உயிரிழந்தார்.

அசுத்தமானத் தொழில்தான். அதையும் இம்மக்கள்தான் செய்கின்றனர். எங்கள் அமைப்பு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு நடத்திய ஆய்வில் தனியார் மற்றும் அரசு பணிகளில் சுமார் 5 லட்சம் மலமள்ளும் தொழிலாளர்கள் இருப்பதை கண்டறிந்தோம். இன்று உலர் கழிப்பிடங்கள் மட்டும் தான் இல்லை. தமிழகத்தில் 30 - 40% வீடுகளில் கழிவறை இல்லை. இவர்கள் திறந்த வெளி கழிவறைகளையே பெருமளவில் பயன்படுத்துகின்றனர். இவற்றையும் கைகளாலேயே சுத்தம் செய்கின்றனர் அத்தொழிலாளர்கள். கழிவுகள் என்ன வடிவில் இருந்தாலும் அதை கைகளால் அகற்றுவது கொடுமையானது என்ற அடிப்படை உண்மையை நாம் ஏற்க வேண்டும்" என்கிறார் சென்னை ஜனோதயம் அமைப்பின் நிறுவனர் இஸ்ரேல்.

மலமள்ளுபவர்கள் மலக்குழிக்குள் இறங்கி சுத்தம் செய்யும்போது முகத்தை திருப்பியபடி அவ்விடத்தை வேகமாக கடந்து செல்கிறவர்களுக்கு இவர்களின் துயரம் ஒரு பொருட்டல்ல. சில நூறு ரூபாய்களுக்காக உயிர்களை பணயம் வைக்கின்றனர் இத்தொழிலாளிகள்.

"உள்ளே போகும்போது மூச்சை இழுத்துப் பிடித்து கண்களையும் வாயையும் இறுக மூடிக் கொள்ள வேண்டும். அசிங்கத்திற்குள் மூழ்கப் போகிறோம் என்ற நினைக்கக்கூடாது. பிளாஸ்டிக் பை, நாப்கின், ஆணுறை என கண்டதும் உள்ளே அடைத்துக் கொண்டிருக்கும். அவற்றை வெறுங்கைகளால் வேகமாகத் துழாவி எடுக்க வேண்டும். நிறைய அடிபடும். தோல் சிராய்ப்புகள் உண்டாகும். மூச்சை அடக்கும் திறமை இல்லையென்றால் இத்தொழில் செய்ய முடியாது. அரை நிமிடம்தான் என்றாலும் அது நரக வேதனை. இதுவரை என்னை விஷவாயு தாக்கவில்லை. ஆனால் எப்போது வேண்டுமானாலும் தாக்கலாம்'' என்று சொல்லும் கணேசன் கடந்த ஐந்தாண்டுகளாக மலக்குழியில் மூழ்கிக் கொண்டிருக்கிறார். ஒப்பந்ததாரரின் கீழ் பணி செய்யும் இவருக்கு வேலை முடிந்ததும் கழுவிக் கொள்ள சோப்புகூட வழங்கப்படுவதில்லை. ஆனால் தமிழ்நாடு குடிநீர் மற்றும் கழிவு நீர் வடிகால் வாரியம் ஆண்டுதோறும் சில கோடிகளை செலவு செய்து பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதாக உயர் நீதிமன்றத்தில் கூறியுள்ளது. அவை எந்த அறையில் உறங்குகின்றனவோ தெரியவில்லை. மூடி வைக்கப்பட்ட மலக்குழிக்குள் புழுக்களும் ஒட்டுண்ணிகளும் நிறைந்திருக்கும். கண்களையும் வாயையும் இறுக மூடிக் கொண்டாலும் அவை காது வழியாக் உள்ளே சென்று மூளையைத் தாக்கும். மீத்தேன், ஹைட்ரஜன் சல்பேட் போன்ற நரம்பு மண்டலத்தை தாக்கும் விஷவாயுக்களும் அடர்ந்திருக்கும். தீக்குச்சியை உரசிப் போட்டு விஷவாயுவை சோதனை செய்வது இவர்களின் வழக்கம். ஆனால் பல நேரங்களில் அந்த சோதனையையும் தொழிலாளர்கள் செய்வதில்லை என்பதால் மரணங்கள் நிகழ்கின்றன (பார்க்க: பெட்டிச் செய்தி).

துப்புரவுப் பணியாளர்களின் துயரம் அரசு வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்ட கடந்த பத்தாண்டுகளில் இரட்டிப்பாகிவிட்டது. மொத்தமாக தனியார்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் ஒப்பந்ததாரர்களின் அதிகபட்ச சுரண்டலுக்கு இவர்கள் ஆளாகின்றனர். வேலை இல்லாத காரணத்தினால் கிடைக்கிற வேலையைத் தக்கவைக்க பாதுகாப்பு குறித்த எந்த உத்திரவாதமும் இல்லாமல் பாதாள சாக்கடை மற்றும் கால்வாய்களுக்குள் இறங்குகின்றனர். ஒப்பந்ததாரர்கள் இவர்களின் பெயர்களைக்கூட பதிவு செய்து வைப்பதில்லை. எந்த வேலைப் பலன்களையும் அனுபவிக்க முடியாமல் தினக்கூலியோடு முடிகிறது இவர்கள் வாழ்க்கை.

"கடந்த 2010 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி 5700 துப்புரவு பணியாளர்கள் இடங்களை நிரப்ப முயன்றபோது 29000 பேர் இதற்கு போட்டி போட்டனர். அதிகாரிகளும் கவுன்சிலர்களும் இந்த ஏழை மக்களிடம் லட்சக்கணக்கான பணத்தை லஞ்சமாகப் பெற்று வேலைவாய்ப்பை வழங்கினர். இதனிடையே நீல் மெட்டல் நிறுவனம் துப்புரவுப் பணியாளர்களை நாங்கள்தான் தேர்வு செய்வோம் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர, கடன் வாங்கி லஞ்சம் கொடுத்த மக்கள் வேலைகளை இழந்தனர். இப்படித்தான் அவர்கள் பல வகையிலும் ஏமாற்றப்படுகின்றனர்" என்கிறார். இஸ்ரேல். தமிழ

**கையால் மலமள்ளுதல் உள்ளிட்ட அத்தனை துப்புரவுப் பணிகளையும் செய்ய அருந்ததியின மக்களே நிர்பந்திக்கப்படுகின்றனர். இதற்கு சாதியே காரணம்.**

**சிறப்புக் கட்டுரை** மலமள்ளும் பணியாளர்கள்



"அரசுப் பணிகளில் பியூன், பெருக்கும் பணி போன்ற வேலைகள்கூட மறுக்கப்பட்டு மலமள்ளுவது ஒன்றே அருந்ததியர்களுக்கு தரப்படுகிறது."

**இரா.அதியமான்** *தலைவர், ஆதித்தமிழர் பேரவை*

## எங்கே எந்திரம்?

கையால் மலமள்ளும் நிலை தொடர்கிறது

எல்லாமே எந்திரமயமாகிவிட்ட வாழ்க்கையில் பாதாள சாக்கடைக்குள் மட்டும் மனிதர்களை இறக்கி வேடிக்கை பார்க்கிறது சமூகம். சென்னையில் மட்டும் 35 மீட்டர் இடைவெளியில் 80 ஆயிரம் பாதாள சாக்கடைகள் இருக்கின்றன. ஆனால் தமிழகம் மொத்தத்திற்குமே வெறும் 78 கழிவு அடைப்பை அகற்றும் எந்திரங்கள்தான் இருக்கின்றன. கழிவு நீர் கால்வாய்களை எந்திரப்படுத்தாமல் தமிழகத்தில் கையாள் மலமள்ளுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டதாக நீதிமன்றங்களிலும் மத்திய அரசிடமும் கூறி வருகிறது தமிழக அரசு.

ஜெட்ராடிங் மெஷின் என்றழைக்கப்படும் இந்த எந்திரம் சந்து பொந்துகளுக்கு நுழைய முடியாத அளவுக்கு மிகப் பெரியதாக இருப்பதால் இதன் பயன்பாடு அகலமான சாலைகளுக்கு மட்டுமானதாக இருக்கிறது. அது

சாய்



கழிவு நீர் ஊர்தி

மட்டுமல்ல, இந்த எந்திரத்திற்கு கால்வாயின் அடி ஆழத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் சிறிய பொருட்களை அகற்றும் திறன் இல்லை. இப்படியொரு எந்திரம் இருப்பதேகூட பொது மக்களுக்குத் தெரிவதில்லை. அடைப்பு இருந்தால் உடனே ஒப்பந்தக்காரர்களிடம் சொல்லி மலக்குழிக்குள் இறங்க ஆள் பிடிக்கின்றனர். ஆள் இறங்கி சுத்தம் செய்வதைப் போல எந்திரம் செய்யாது என்ற மூட நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கிறது. மலக்குழிக்குள் மனிதரை இறக்கும் ஒவ்வொருவரும் தன்னை அதே இடத்தில் வைத்துப் பார்த்தால் மட்டுமே இக்கொடுமையின் தீவிரம் புரியும்.

### கீழ்பாக்கம்



சாய்

**பெரிய முனுசாமி 33**
**சின்ன முனுசாமி 30**

இருவரும் சிறு வயதிலிருந்தே பாதாள சாக்கடையை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தனர். இருவரும் அடுத்தடுத்து உயிரையும் விட்டனர்.

சென்னை கீழ்பாக்கம் டிபி சத்திரத்தைச் சேர்ந்த சகோதரர்கள். கடந்த 9.2.2012 அன்று காய்ச்சலாக இருந்த பெரிய முனுசாமியை செப்டிங் டாங்க் அடைப்பை அகற்றச் சென்றிருக்கிறார். தம்பியும் கூடவே சென்றார். மலக்குழிக்குள் முதலில் இறங்கிய பெரிய முனுசாமி விஷவாயு தாக்கி உள்ளே விழ அண்ணனை காப்பாற்ற இறங்கினார் சின்ன முனுசாமி. அப்போதே பெரிய முனுசாமி உயிரிழந்தார். விஷவாயு தாக்கியதில் சின்ன முனுசாமியும் 25.5.2012 அன்று உயிரிழந்தார். சின்ன முனுசாமியின் மனைவி மனச்சிதைவுக்குள்ளாகி ஆந்திரா சென்றுவிட, இருவரின் சகோதரியான முனியம்மாள் ஆதரவின்றி நிற்கிறார்.

கத்தில் உள்ள வீடுகளின் எண்ணிக்கைக்கு 45 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள் இருக்க வேண்டும். ஆனால் 7500 பேரைத்தான் அரசு நியமித்திருக்கிறது. ஆள் பற்றாக்குறை காரணமாக பல ஆட்களின் வேலை ஒரு ஆள் தலையில் விழுகிறது. பின் ஏன் காலரா வராது?" என்று கேட்கிறார் சமூக ஆர்வலர் அன்புவேந்தன்.

ஊரை சுத்தப்படுத்தும் இத்தொழிலாளர்கள் சுகாதாரமில்லாமல் பணியாற்றுவதால் டிபி, மஞ்சள் காமாலை, தோல் நோய்கள் போன்ற பல உடல்ரீதியான பாதிப்புகளுக்கு ஆளாகி அற்பாயுசில் உயிரிழக்கின்றனர். இத்தொழிலின் ஆபத்துகளை அறிந்திருந்தபோதும் பிழைக்க வழியில்லாமல் அதை தொடர விரும்புகின்றனர் பலரும். கையால் மலமள்ளும் வேலை செய்தவர்களை அத்தொழிலில் இருந்து விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வளிக்க ஆண்டுதோறும் மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. 2011 - 12 ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தமிழக அரசு வாங்கவே இல்லை. காரணம், தமிழகத்தில் கையால் மலமள்ளும் தொழிலாளர்களே இல்லை என்ற சப்பைக்கட்டு. தாட்கோ மூலமாக சில ஆண்டுகளுக்கு முன்னர் மாற்றுத் தொழில்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது. ஆனால் கையூட்டு போக கொடுக்கப்பட்ட சில லட்சங்கள் அவர்களின் சொந்தத் தேவைகளுக்கே பயனாகின. "சோற்றுக்கே வழியில்லாத நிலை எங்களுக்கு. தொழில் தொடங்கினால் ஒரே செலவில் நிற்குமா? கூடுதலாக பணம் தேவைப்படுகிறது. எங்கே போவது? மகளுக்கு திருமணம் வரவும் அந்த பணத்தை செலவழித்துவிட்டேன். எங்களுக்குத் தேவை மாற்று வேலைதான்" என்கிறார் வட சென்னை பகுதியில் வசிக்கும் துப்புரவுத் தொழிலாளி ஒருவர்.

கையால் மலமள்ளுவதை தொழிலாக அங்கீகரிப்பதே தவறு என்ற முழக்கம் தேசிய அளவில் முன் வைக்கப்படுகிறது. ஏதோ மாநில அரசுகள் பொய் சொல்வதாக மத்திய அரசு நாடகமாடுகிறது. நாட்டின் மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனமான ரயில்வேயில் தண்டவாளங்களை வெறுங்கைகளால் சுத்தம் செய்ய மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. "இவர்களுக்கு முறையான பாதுகாப்புக் கவசங்கள் வழங்கப்பட்டிருந்தால் அவர்களை கையால் மலமள்ளுபவர்களாக கருத வேண்டியதில்லை என்கிறது அண்மைச் சட்டம். இதை ஏற்பதற்கில்லை. பாதுகாப்பு கவசங்களை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். அசிங்கத்தை கையாளும் இத்தொழில் மனித உரிமைகளுக்கு எதிரானது. அதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். இப்பணியை கைவிடுபவர்களுக்கு புயல், சுனாமி நிவாரணம் போல ரூ. 20 ஆயிரம் தற்காலிக நிவாரணம் கொடுக்க வேண்டும். நிரந்தர நிவாரணமாக ரூ.3 லட்சம் இலவசமாகவும் புதிய தொழில் தொடங்க ரூ.2 லட்சம் குறைந்த வட்டியில் கடனாகவும் தரப்பட வேண்டும். சாதி ஒழியும் வரை இத்தொழில் ஒழியாது. சட்டங்களை விடவும் பொது சமூகத்தின் மனமாற்றமே இழிதொழில்களை ஒழிக்கும்" என்கிறார் பெசவாடா வில்சன்.

சக மனிதனின் இழிவை அகற்றுவதே மேன்மையான சமூகத்திற்கான அடையாளம். அந்த வகையில் தமிழகம் மேன் மக்களின் மண்ணா? ■